பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை 22.03.2022 கதிர் 05

## இலங்கையின் பணவீக்கம் கட்டுக்கடங்காது அதிகரிப்பு

இலங்கையின் பணவீக்கம் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் நிலையில், தற்போது அது 17.5 வீதத்தை எட்டியுள்ளது.

இலங்கை வரலாற்றில் பதிவான அதிக பண வீக்க நிலைமை இதுவாகும் எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் ☞2



# இராஜாங்க அமைச்சுப் பதவியை தூக்கியெறிந்தார் நிமல் லான்சா

## இராஜிநாமாக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான நிமல் லான்சா, தான் வகித்து வந்த கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுப் பதவியை இன்று அதிரடியாக இராஜிநாமா செய்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசின் செயற்பாடுகளை அண்மைக்காலமாக கடுமையாக விமர்சித்து வந்த நிமல் லான்சாவைப் பஸில் தரப்பு ஓரங்கட்டியது. அதுமட்டுமல்ல இராஜாங்க அமைச்சுப் பதவியை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கான ☞2

# ஆட்டம் காணும் அரசுக்கு முண்டுகொடுக்காதீர்கள்!

## சு.கவிடம் விமல் வலியுறுத்து

**ராஜபக்ஷ அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்த அரசுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இனியும் முண்டுகொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேற வேண்டும்.**

**- இவ்வாறு முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.** ☞2



## பதவியை கடாசினார் கம்மன்பில



புதிய ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அரசின் மற்றுமொரு பதவியில் இருந்த விலகியுள்ளார். சீதாவாக்கை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவியில் இருந்து அவர் விலகியுள்ளார்.

இது தொடர்பாக கம்மன்பில ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

வலுசக்தி அமைச்சர் ☞2

## கோட்டாவின் சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்க 13 கட்சிகள் தீர்மானம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பதற்கு அரச பங்காளிக் கட்சிகள் உட்பட 13 அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. 5 கட்சிகள் 'மதில்மேல் பூனை' நிலைப்பாட்டிலேயே உள்ளன. இதனால் மாநாட்டை புறக்கணிக்கும் கட்சிகளின் எண்ணிக்கை 18 வரை அதிகரிக்கக்கூடும்.

இதனால் 'பெரும்பான்மை' எதிர்ப்புக்கு மத்தியிலுயே மாநாட்டை நடத்த வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அதாவது ☞2

## மின், தண்ணீர் கட்டணம் எகிறுமா? அமைச்சரவையில் முடிவு இல்லை



மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு இன்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின்சாரம் மற்றும் ☞2

## அமைச்சரின் சாரதி படுகொலை; பிரதான சந்தேகநபர் சிக்கினார்!

வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகேவின் சாரதியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று காலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட பகையின் காரணமாக பிலியந்தலை - மாவிட்ட பகுதியில் வைத்து அமைச்சரின் வாகன சாரதி நேற்று வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடும் பொருளாதார நெருக்கடியால்

# குடும்பத்தினருடன் தமிழகத்துக்கு படையெடுக்கும் இலங்கையர்கள்!





(ந.லோகதயாளன்)

இலங்கையில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கடுமையான பொருளாதார சிக்கல் ஏற்பட்டு மக்கள் அத்தியாவசியப்பொருள்களை வாங்க முடியாமல் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். இந்நிலையில், இலங்கையின் கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ☞2

## கோட்டாவின் சர்வகட்சி மாநாட்டை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வகட்சி மாநாடானது 'மணமகள்' இன்றிநடத்தப்படும்திருமணம்போலவே அமையும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது சுதந்திரக் கட்சியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் சர்வகட்சி மாநாட்டை நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டிருந்தார்.

இதற்காக மார்ச் 23ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு தனித் தனியே அழைப்பும் விடுக்கப்பட்டது.

15 கட்சிகளே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளாகும். அதாவது கடந்த பொதுத் தேர்தலில் தமது கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கட்சிகளே அவை. சில கட்சிகள் பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. அவை தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாக இருந்தபோதிலும், கூட்டணி அமைத்து போட்டியிட்டதால், கூட்டணிக்கு ஒதுக்கப்படும் நேரம் மற்றும் சிறப்புரிமைகளில் இருந்தே இக்கட்சிகளுக்கு ஒதுக்கீடுகள் இடம்பெறும்.

எனினும், அக்கட்சிகளின் தலைவர்களும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதால், நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துப்படுத்தும் அரசியல் கட்சிகள் விவரம் வருமாறு:-

1. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன
2. ஐக்கிய மக்கள் சக்தி
3. இலங்கைத் தமிழரசுக்கட்சி
4. தேசிய மக்கள் சக்தி
5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
6. ஈழ மக்கள் ஜனநாயக்கட்சி (ஈ.பி.டி.பி.)
7. ஐக்கிய தேசியக்கட்சி
8. எமது மக்கள் கட்சி
9. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்
10. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
11. முஸ்லிம் தேசியக் கூட்டணி
12. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி
13. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
14. தேசிய காங்கிரஸ்
15. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.

இதற்கு மேலதிகமாக - அதாவது பொதுத்தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிட்டு - நாடாளுமன்றம் அங்கம் வகிக்கும் - தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் விவரம் வருமாறு:-

1. ஜனநாயகமக்கள்முன்னணி(மனோ)
2. மலையகமக்கள்முன்னணி (ராதா)
3. தொழிலாளர் தேசிய முன்னணி (திகா)

(மேற்படி கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தின் கீழ் போட்டியிட்டன.)

4. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (ஜீவன்)
5. இலங்கை கம்யூனிஸ் கட்சி (வீரசுமன)
6. லங்கா சமசமாஜக்கட்சி (திஸ்ஸ வித்தாரண)
7. தேசிய சுதந்திர முன்னணி (விமல்)
8. புதிய ஹெல உறுமய (கம்மன்பில)
9. மக்கள்ஐக்கியமுன்னணி(தினேஷ்)
10. ஜனநாயக இடதுசாரி முன்னணி (வாசு)

(மேற்படி கட்சிகள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 'மொட்டு' சின்னத்தின்கீழ்பொதுத்தேர்தலில்போட்டியிட்டன.

11. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்)
12. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)

(மேற்படி கட்சிகள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட்டன.

அந்தவகையில், சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்க 27 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சர்வகட்சி மாநாட்டை புறக்கணிக்கத் தீர்மானித்துள்ள கட்சிகள் விவரம் வருமாறு:-

1. ஐக்கிய மக்கள் சக்தி
2. தேசிய மக்கள் சக்தி
3. ஜனநாயக மக்கள் முன்னணி
4. மலையக மக்கள் முன்னணி
5. தொழிலாளர் தேசிய சங்கம்
6. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
7. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி
8. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
9. அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ்
10. தேசிய சுதந்திர முன்னணி
11. புதிய ஹெல உறுமய
12. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
13. ரெலோ

புறக்கணிக்கலாம் என எதிர்பார்க்கப்படும் கட்சிகள் விவரம் வருமாறு:-

13. ஜனநாயக இடதுசாரி முன்னணி
14. இலங்கை கம்யூனிஸ் கட்சி
15. முஸ்லிம் தேசியக் கூட்டணி
16. தேசிய காங்கிரஸ்
17. ஐக்கிய தேசியக்கட்சி

பங்கேற்கும் கட்சிகள் விவரம் வருமாறு:-

1. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி
2. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
3. லங்கா சமசமாஜக் கட்சி
4. எமது மக்கள் சக்தி கட்சி
5. ஈ.பி.டி.பி.
6. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி
7. மக்கள் ஐக்கிய முன்னணி
8. இலங்கைத் தமிழரசுக் கட்சி
10. புளொட்

(லங்கா சமசமாஜக் கட்சி, எமது மக்கள் சக்தி என்பவற்றின் உறுதியான நிலைப்பாடும் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சர்வககட்சி மாநாட்டை புறக்கணிக்க வேண்டும்எனதமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையானிடம் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, இவரும் இன்னும் இரட்டை நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்.)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் திசை திருப்புவதற்கான ஓர் ஊடக பரப்புரையாகவே சர்வகட்சி மாநாட்டை அரசு நடத்துகின்றது என எதிரணிகள் சுட்டிக்காட்டியுள்ளன. இப்படியான மாநாட்டில் பங்கேற்பதில் பயன் இல்லை என்பதால்தான் புறக்கணிக்கும் முடிவை எடுத்ததாக அவை சுட்டிக்காட்டியுள்ளன.

சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்தால் அது ஜனாதிபதியுடன் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள மாநாட்டில் தாக்கம் செலுத்தும். எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ரெலோ தவிர்த்து இலங்கைத் தமிழரசுக் கட்சியும், புளொட்டும் கூட்டத்துக்குச் செல்லும் முடிவை எடுத்திருக்கலாம்.

## மின், தண்ணீர் கட்டணம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தண்ணீர் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை. எனினும், ரயில் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது - என்றார்.

## குடும்பத்தினருடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெரும்பாலான இலங்கையர்கள் அகதிகளாக தமிழகத்துக்குப் படையெடுத்துச் செல்லும் சூழல் உருவாகி வருகின்றது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே 13 மணல் தீடைகள் உள்ளன. இதில் இந்தியாவுக்குச் சொந்தமான 6 தீடைகளும், இலங்கைக்குச் சொந்தமான 7 தீடைகளும் உள்ளன. இந்நிலையில், தனுஷ்கோடிக்கு அடுத்த மூன்றாம் மணல் தீடை பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக ஓர் ஆண், இரு பெண்கள் மற்றும் ஒரு கை குழந்தை உட்பட 3 குழந்தைகைள் என 6 பேர் நிற்கின்றனர் என்று கியூ பிரிவுப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்துகியூபிரிவுப்பொலிஸார், இந்தியக் கடலோர காவல் படைக்குத் தகவல் கொடுத்ததையடுத்து கடலோர காவல் படையினர் அவர்களைக் கைது செய்து விசாரணை நடத்தியதில் முதல் கட்டமாக இலங்கை தலைமன்னார் பகுதியில் இருந்து அகதிகளாக தமிழகத்துக்கு வந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து 6 பேரும் இந்தியக் கடலோர காவல் படைக்குச் சொந்தமான கப்பலில் ஏற்றி மண்டபம் கடலோர காவல் படை அலுவலகத்துக்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இலங்கையில் இருந்து தமிழகம் வந்த அகதிகள் தரும் உறுதியான தகவல்களை அடுத்து அவர்களை இலங்கை அகதிகள் முகாமில் வைப்பார்களா அல்லது சிறைக்குக் கொண்டு செல்வார்களா என்பது முழு விசாரணைக்குப் பின்னர் தெரியவரும்.

மேலும், தற்போது சென்றுள்ள 6 பேர் அகதிகளாக எதற்கு வந்தார்கள் என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றது. மேலும், இது போன்று இலங்கையில் இருந்து அகதிகளாக ஏராளமானோர் தமிழகத்துக்குச் செல்லத் தயாராக இருக்கின்றனர் என்று விசாரணையில் தெரியவருகின்றது.

இதையடுத்து இலங்கையில் இருந்து அகதிகளாக அதிகமானோர் தமிழகத்துக்குச் செல்ல வாய்ப்புள்ளது எனக் கிடைத்த தகவலை அடுத்து இந்தியக் கடலோர காவல் படை, கியூ பிரிவு, மரைன் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆட்டம் காணும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாமும் பொறுமை காத்து அரசுக்கு முண்டுகொடுத்து வந்தோம். இறுதியில் எமது அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி பிடுங்கி எடுத்தார்.

தற்போது அமைச்சர்கள் தாமாகவே பதவியிலிருந்து விலக ஆரம்பித்துள்ளனர். சுதந்திரக் கட்சியினர் இனியும் இந்த அரசுக்கு முண்டுகொடுக்காமல் தீர்க்கமான முடிவெடுத்து வெளியேற வேண்டும்.

ராஜபக்ஷ அரசு ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியினரைச் சமாளிக்கவே சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்துகின்றார்.

இதைப் புரிந்துகொண்டு எதிர்க்கட்சிகளும் மாநாட்டைப் புறக்கணித்துள்ளன. எமது கட்சியும் மாநாட்டுக்குச் செல்லாது.

சுதந்திரக் கட்சியுடனோ அல்லது வேறு எந்தக் கட்சியுடனோ கூட்டுச் சேர்வது தொடர்பில் நாம் இன்னமும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை. நாம் தற்போது மக்கள் பக்கம் நின்றே செயற்படுகின்றோம் - என்றார்.

## பதவியை கடாசினார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டுள்ளமையால், மற்றுமொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதவியை தொடர்ந்தும் வகிப்பது பொருத்தமற்றது எனக் கம்மன்பில தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

அமைச்சரவையில் இருந்துகொண்டு அரசின் நடவடிக்கைகளை விமர்சித்து வந்தனர் என்ற குற்றச்சாட்டில் உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரை அமைச்சுப் பதவிகளில் இருந்து ஜனாதிபதி அண்மையில் பதவி நீக்கம் செய்திருந்தார்.

## இராஜாங்க அமைச்சுப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாய்ப்பும் மறுக்கப்பட்டதால் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுடன் அடிக்கடி முரண்படவேண்டிய நிலைமை லான்சாவுக்கு ஏற்பட்டது.

இதனால் அமைச்சுக்குச் செல்வதை சுமார் ஒரு மாத காலமாக லான்சா தவிர்த்து வந்தார். இதற்கிடையில் மற்றுமொரு இராஜாங்க அமைச்சரால் நிமல் லான்சாவுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
16.8 வீதமாக இருந்த பணவீக்கம், பெப்ரவரியில் 17.5 வீதமாக அதிகரித்துள்ளது. இம்மாதம் மேலும் அதிகரிப்பைக்காட்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் தற்போதைய சூழ்நிலையில் அதிக பணவீக்கம் உடைய நாடாக இலங்கை கருதப்படுகின்றது.

ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுவருவதுடன், டொலரின் பெறுமதியும் அதிகரித்து வருகின்றது. மறுபுறத்தில் பொருட்களின் விலைகளும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ENGLISH CLASSES
யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும் திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாரதத்தை மதிப்போம்

பொருளாதார நெருக்குவாரங்களினால் சாதாரண பாமர மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமை மிக மோசமாக பாதிக்கப்பட்டு செல்கின்றது.

இலங்கையின் சரித்திரத்தில் முன்பின் இல்லாத நிலைமை. அத்தியாவசிய பொருள்களின் விலைகள் கண்மூடித்தனமாக எகிறுகின்றன. குறுகிய காலத்துக்குள் அனைத்துப் பொருள்களும் ஐம்பது வீதம் முதல் நூறு வீதம் வரை விலை அதிகரித்துவிட்டன. எண்ணிப் பார்க்கவே முடியாத – நம்ப முடியாத – கற்பனை பண்ணக் கூட இயலாத – விலை அதிகரிப்பு.

எரிபொருளில் இருந்து ஒவ்வொரு வகையான அத்தியாவசியப் பொருள்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. சாமானிய மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் விரைந்து உதவ முன்வந்தது இந்தியா.

'அயல் தேசத்துக்கு முன்னுரிமை' என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கருத்தியலுக்கு அமைய, மிக நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு உதவ இந்தியா விரைந்தது. கட்டுக்கடங்கா விலை உயர்வுக்கு மத்தியிலும் கடந்த வாரங்களில் மிக மோசமாக இருந்த எரிபொருள் பற்றாக்குறை – தட்டுப்பாடு – இப்போது ஓரளவு நீங்குகின்றது. விநியோகம் தாராளமாகக் கூடிய சூழ்நிலை தென்படுகின்றது என்றால் அதற்குக் காரணம் இத்துறையில் இந்தியா வழங்கிய சமய சந்தர்ப்பம் பார்த்த உதவிதான். தாமதம் இன்றி, விரைந்து, எரிபொருள் கப்பல்கள் இலங்கைக்கு வந்து, அவற்றை விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் விக்கினமின்றி முன்னேறியமைக்கு பாரதத்தின் சரியான சமய சந்தர்ப்ப உதவித் திட்டம் தான் காரணம்.

'உடுக்கை இழந்தவன் கை போல அங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்றான் வள்ளுவப் பெருந்தகை. அதுபோல, நெருக்கடியில் சிக்கிய இலங்கைக்கு சரியான சமயத்தில் நட்பு நாடாக விரைந்து வந்து உதவியது இந்தியா.

அந்த நட்புக்கு உரிய முறையில் இலங்கையும் அரசும் மக்களும் பிரதியுபகாரமாக நடந்து கொள்கின்றார்களா என்பதுதான் கேள்வி. இந்தியா வழங்கிய கடனுதவிகளை இலங்கையால் உடனடியாகத் திரும்பச் செலுத்த முடியாத நிலை இருக்கலாம். ஆனால் சரியான நன்றி உணர்வை இலங்கையால் பிரதிபலிக்க முடியும். அதை இலங்கை செய்கின்றதா, செய்யுமா என்பதுதான் கேள்வி.

சரியோ, பிழையோ இந்தியா இந்தப் பிராந்தியத்தின் ஒரு வல்லாதிக்க சக்தி. அதன் பாதுகாப்பு நலன் அதற்கு பிரதானமானது. இலங்கை போன்ற சிறிய நாட்டினால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எதையும் ஏற்படுத்த முடியாது என்பது திண்ணம். எனினும் அப்படி அச்சுறுத்தலை விளைவிக்க எண்ணும் பெரிய சக்திகளின் கருவியாக இலங்கை மாறலாம். அதற்கு இடமளிக்காமல் பொறுப்புடன் பார்த்துக் கொள்வது இலங்கையின் கட்டாய கடப்பாடாகும்.

தன்னுடன் ஒப்பிடுகையில் மிகச்சிறிய நாடாகக் கருதக்கூடிய இலங்கை விடயத்திலும் கூட, 'அயல் தேசத்துக்கு முன்னுரிமை', 'பக்கத்து நாட்டுடன் நல்லுறவு' என்று பரந்த கருத்துடன் செயல்படுகின்றது பாரதம். அதன் பாதுகாப்புக்கு சற்றேனும் குந்தகம் வராமல் நடந்து கொள்வது தான் அந்த வல்லாதிக்க தேசம் இலங்கைக்குச் செய்யும் பேருதவிக்கு இலங்கை செய்யக்கூடிய கைமாறு. அதில் கொழும்பு அரசும் இலங்கை மக்களும் கவனமாகவும் சிரத்தையாகவும் இருக்க வேண்டும்.

# அமைச்சுப் பதவிக்காகப் பேரம் பேசும் ஆளும்தரப்பே மலையகத்தில் உள்ளது

## வேலுகுமார் வேதனை



'மலையக மக்கள் பட்டினியில் வாடும் நிலைமையிலும், அமைச்சுப் பதவிக்காகப் பேரம் பேசும் ஆளும் தரப்பே இன்று மலையகத்தில் உள்ளது.' என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை)இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் நீண்ட போலின் வரிசையில் பொருள்களுக்காக நிற்கும் நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

பொருள்களுக்கான விலைகள் தொடர்பாக எந்தவித கட்டுப்பாடும் அற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. வியாபாரிகள் வைப்பதே, பொருள்களுக்கான விலை என்ற நிலைமை தோன்றியுள்ளது. இந் நெருக்கடியான சூழ்நிலையில் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்காக முன்னிற்க வேண்டியவர்கள், மலையக மக்கள் பட்டினியில் வாடும் நிலைமையிலும், அமைச்சுப் பதவிக்காக பேரம் பேசுபவர்களாகவே உள்ளனர்.

இன்றைய அரசாங்கத்தின் ஆரம்பம் முதலே, மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு, அடிக்கு மேல் அடி விழுந்து வருகின்றது. தோட்ட நிர்வாகங்களின் அதிகார துஷ்பிரயோகம் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. தேவையான நாள்கள் வேலை வழங்குவதில்லை.

திட்டமிட்டு வேலை நாள்களை குறைப்பது, வேலை செய்ய வேண்டிய அளவை அதிகரிப்பது, என்பன வழமையான பிரச்சினையாக மாறியுள்ளது. ரூபா ஆயிரம் நாட்கூலிக்கான தீர்வு இல்லை. வருமானம் நாளுக்கு நாள் குறைந்தே வருகின்றது. இச்சூழலில் மக்கள் ஒரு வேளை உணவையாவது உட்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று மலையக மக்கள் நாளாந்தம் அதிகம் பயன்படுத்தும் கோதுமை மாவிற்கும், மண்ணெண்ணெய்க்கும் பாரிய தட்டுப்பாடு மலையகத் தோட்ட பிரதேசங்கள் எங்கும் நிலவுகின்றது. பொருள்களை வாங்க போலின்களுக்கு போவதா? இல்லை, தொழிலுக்கு போவதா எனத் திண்டாடும் நிலைக்கு தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலைமைக்கு ஆளும் தரப்பில் இருந்தால் தான் அனைத்தையும் சாதிக்கலாம் எனக் கூறி, எமது மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் மக்களின் இந்நிலைமை தொடர்பாக எந்தவித அக்கறையும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எமது மக்களின் பிரச்சினைகளைக் கூறி, பேரம் பேசி, மக்களைக் காப்பாற்ற வேண்டியவர்கள், இன்று மக்களை நடு றோட்டில் விட்டுவிட்டு அமைச்சுப் பதவிக்காக அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் நிலைமையைக் காண முடிகின்றது.

மக்கள் இந்த அரசாங்கத்தையே விரட்டி அடிக்கப் பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில், மக்களை மறந்து அமைச்சுப் பதவிக்காக அலைபவர்களுக்கு மக்கள் விரைவிலேயே பதில் கொடுப்பார்கள். – எனத் தெரிவித்தார்.

# பயங்கரவாத நவீன அச்சுறுத்தலுக்கு தீர்வு காணப் புதிய சட்டம் வேண்டும்

## ரணில் கோரிக்கை



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் –

நவீன பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்குத் தீர்வு காண புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்கும் போது புலனாய்வு அமைப்பும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். புதிய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் உருவாகலாம் என்பதால் புதிய சட்டத்தை கொண்டுவந்து இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ள நாடு தயாராக இருக்க வேண்டும் என முன்னாள் பிரதமர் தெரிவித்தார்.

# போலிநாணயத்தாள்களுடன் ஒருவர் தங்காலையில் கைது



தங்கல்லை பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வீரகெட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்ததெமலிய பிரதேசத்தில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வலஸ்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை விசாரணைக் குட்படுத்தியதில் போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் 11 மற்றும் நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட அச்சு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

வீரகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 2 ஆயிரம் குழந்தைகள் கடத்தல் ரஷ்யா மீது உக்ரைன் குற்றச்சாட்டு



டான்பாஸ் மாகாணத்தின் ஒரு பகுதி உக்ரைனின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

உக்ரைனில் தாக்குதல் நடத்தி வரும் ரஷ்ய ராணுவம், பொது மக்களை பிணயக் கைதிகளாக பிடிப்பதாக உக்ரைன் குற்றம் சாட்டி வருகிறது. இந்த நிலையில் 2000க்கும் மேற்பட்ட குழந்தைகளை ரஷ்யா கடத்தி சென்று உள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியுறவு அமைச்சகம் கூறியதாவது:-

டான்பாஸ் பிராந்தியத்தில் இருந்து குழந்தைகளை ரஷ்யா கடத்தி சென்றுள்ளது. ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள டான்பாஸ் பகுதியில் இருந்து 2,389 குழந்தைகள் ரஷ்யாவுக்கு சட்டவிரோதமாக நாடு கடத்தப்பட்டு உள்ளனர் என்று தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் படையெடுப்பில் குழந்தைகள் குறி வைக்கப்பட்டு கடத்தப்படுகின்றனர் என உக்ரைன் தெரிவித்துள்ளது. டான்பாஸ் மாகாணத்தின் ஒரு பகுதி உக்ரைனின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலும் உள்ளது. உக்ரைன் மீது போரை தொடங்குவதற்கு முன்பு ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர் வசம் உள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை தனி சுதந்திர நகரங்களாக ரஷ்ய அதிபர் புடின் அறிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் இராணுவ வீரர்கள் சரணடைய ரஷ்யப் படைகள் கெடு



ரஷ்யாவின் எச்சரிக்கைக்கு உக்ரைன் ஒரு போதும் அடிபணியாது என்று அந்நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா அந்நாட்டின் முக்கிய நகரங்களை கைப்பற்றும் நோக்கில் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

உக்ரைன் தலைநகர் கீவில் உள்ள ஒரு வணிக வளாகம் மீது ரஷ்ய படைகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

அந்த வணிக வளாகத்தை உக்ரைன் ராணுவத்தினர் ரொக்கெட் லாஞ்சர் உள்ளிட்டவற்றை சேமிக்க பயன்படுத்தி வருவதை அறிந்த ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்தினர் என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஷென்கோவ் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மரியுபோல் நகரில் உள்ள உக்ரைன் ராணுவத்தினர் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு சரணடைய வேண்டும் என்ற ரஷ்ய படையினர் விடுத்திருந்த எச்சரிக்கையை உக்ரேனிய அதிகாரிகள் நிராகரித்தனர். உக்ரைன் தென்கிழக்கு நகரங்களில் இருக்கும் உக்ரேனியர்கள் அதிகாலை 5 மணிக்குள் சரணடையுமாறும், அவ்வாறு செய்பவர்கள் வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என்றும் ரஷ்ய படையினர் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், ரஷ்யாவின் இறுதி எச்சரிக்கைகளுக்கு, உக்ரைன் ஒருபோதும் அடிபணியாது என அந்நாட்டு அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

## ரஷ்யா நாட்டு விவகாரம் தொடர்பாக இந்தியா நடுங்குகிறது என்கிறார் பைடன்



உக்ரைனுக்கு எதிராக சண்டையிட்டு வரும் ரஷ்யாவுக்கு எதிராக சிலவற்றில் இந்தியா நடுங்குகிறது என அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போரை நிறுத்துமாறு வலியுறுத்தியும் ரஷ்யா போரை நிறுத்தவில்லை. உக்ரைன் ராணுவம் ஆயுதங்களை கீழே போடும் வரை போரை நிறுத்த மாட்டோம் என ரஷ்ய அதிபர் புடின் அறிவித்துள்ளார்.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பேச்சுக்கு அழைப்பு விடுத்தும் எந்த பயனும் இல்லை. இதற்கிடையே அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகள், நேட்டோ நாடுகள் என பல்வேறு நாடுகளைக் கொண்ட அமைப்புகளும் ரஷ்யாவுக்கு எதிராக உள்ளன. இதேபோல் குவாட் அமைப்பில் இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளன. இதில் இந்தியாவை தவிர மற்ற நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக உள்ளன.

இந்தியா ஐ.நா. சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் உக்ரைனுக்கு ஆதரவாக வாக்களிக்காமல் வெளிநடப்பு செய்தது. பொருளாதாரத்தடை காரணமாக ரஷ்யா மசகு எண்ணெயை விற்பனை செய்ய முடியாமல் உள்ளது. இதனால் மலிவு விலையில் விற்க முடிவு செய்தது.

ரஷ்யாவின் மலிவு விலை மசகு எண்ணெயை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. இதில் அமெரிக்காவுக்கு அதிருப்தி அளித்துள்ளது. தங்களுடன் நட்பில் உள்ள அனைத்து நாடுகளும் ரஷ்யாவுக்கு எதிராக இருக்கும்போது இந்தியா மட்டும் தனித்து இருப்பதாக அமெரிக்கா உணர்கிறது.

நேற்று வொஷிங்டனில் அமெரிக்க தொழில் அதிபர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் ஜோ பைடன் கலந்து கொண்டார். அப்போது பேசிய ஜோ பைடன், "நேட்டோ மற்றும் பசுபிக் நாடுகள் ஒருங்கிணைந்து இருக்கின்றன. ஆனால், குவாட் அமைப்பில் இந்தியா சிலவற்றில் நடுங்கும் நிலை உள்ளது. ஆனால், ஜப்பான் அதிக அளவில் எதிர்க்கிறது. ஆஸ்திரேலியாவும் அப்படித்தான் உள்ளது.

புடின் நேட்டோவை பிரித்து விடலாம் என நினைக்கிறார். அதற்குப் பதிலாக நேட்டோ அதன் முழு வரலாற்றிலும் இன்று இருப்பதை விட வலிமையாக ஒன்றுபட்டு இருந்ததில்லை" என்றார்.

## சீனாவில் டிஸ்னி பொழுதுபோக்கு பூங்கா மூடல்



கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு ஷாங்காய் நகரில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவை காலவரையறையின்றி மூடுவதாக டிஸ்னி நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த டிஸ்னி நிறுவனத்தின் பொழுதுபோக்கு பூங்காக்கள் உலகம் முழுவதும் பிரபலமானவை. அந்த வகையில் சீனாவில் அதிக மக்கள் தொகையை கொண்ட பெரிய நகரமான ஷாங்காய் நகரில் பிரமாண்டமான டிஸ்னி பொழுதுபோக்கு பூங்கா உள்ளது.

இந்நிலையில், சீனாவில் 2 ஆண்டுகளுக்கு பிறகு கொரோனா பரவல் வேகமெடுக்க தொடங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து அங்கு பல்வேறு நகரங்களில் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சீனாவில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களின் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனிடையே ஷாங்காய் நகரிலும் தற்போது கொரோனா வேகமாக பரவி வருகிறது. எனினும், அங்கு இதுவரை ஊரடங்கு அமுல்படுத்தப்படவில்லை. அதே சமயம் முடிந்தவரை மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு ஷாங்காய் நகரில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவை காலவரையறையின்றி மூடுவதாக டிஸ்னி நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், அடுத்த அறிவிப்பு வரும் வரை பொழுதுபோக்கு பூங்கா மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவுடனான தூதரக உறவை முறிப்போம் என ரஷ்யா எச்சரிக்கை




புடின் குறித்து பைடன் பேசியுள்ள கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், அந்நாட்டின் அதிபர் புடின் குறித்து, அமெரிக்க அதிபர் ஜே பைடன் அண்மையில், கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தி விமர்சனம் செய்திருந்தார்.

புடின் போர்க் குற்றவாளி என்றும், ஒரு கொலைகார சர்வாதிகாரி, மூர்க்கத்தனம் கொண்டவர் என்றும் பைடன் குற்றம் சாட்டியிருந்தார்.

# மேகதாது திட்டத்துக்கு எதிரான தீர்மானம் கர்நாடகா முதல்வர் கடும் கண்டனம்



மேகதாது அணைத் திட்டத்துக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு கர்நாடகா முதல்வர் பசவராஜ் பொம்மை கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

காவிரியின் குறுக்கே மேகதாது பகுதியில் அணை கட்ட கர்நாடகா அரசு முயற்சித்து வருகிறது. இந்த அணைகட்டப்பட்டால்காவிரியில்இருந்துதமிழகத்துக்கு கிடைக்கும் தண்ணீரின் அளவு வெகுவாக குறைந்துவிடும் எனக் கூறி இத்திட்டத்துக்கு தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இதனிடையே மேகதாது அணை திட்டத்துக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைத்து கட்சிகளும் இந்த தீர்மானத்துக்கு ஆதரவு அளித்திருந்தன. இந்தநிலையில் இந்தத் தீர்மானத்துக்கு கர்நாடகா முதல்வர் பசவராஜ் பொம்மை கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பதிவில் 'மேகதாது அணைத்திட்டத்துக்குஎதிராகதமிழகசட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது சட்ட விரோதமான ஒன்று. மற்றொரு மாநிலத்தின் உரிமையில் தலையிட்டதன் மூலம் இது மக்களுக்கு எதிரான தீர்மானமாவே கருதப்படவேண்டும். என்ன நடந்தாலும் மேகதாது அணைத் திட்டத்தை கர்நாடகா அரசு செயல்படுத்தியே தீரும், என தெரிவித்துள்ளார்.

## 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்த இந்திய மத்திய அரசு பரிசீலனை

18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் மருந்தினைச் செலுத்துவதற்கு இந்திய மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகின் பல பகுதிகளிலும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பதை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தியாவில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் மருந்தினைச் செலுத்த முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெளிநாடுகளுக்கு செல்வோர் சந்திக்கும் சிரமங்களை கருத்தில் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் உள்ள அனைத்து சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னெச்சரிக்கையாக கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி முதல் பூஸ்டர் டோஸ் போடப்படுகிறது. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக 18 வயதிற்கு




மேற்பட்ட அனைவருக்கும் மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்த இந்திய அரசு திட்டமிட்டுள்ளதாக குறித்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், எந்த வயதினராக இருந்தாலும் பூஸ்டர் டோஸ் போட்டுக்கொள்ள அவர்கள் இரண்டாம் டோஸ் தடுப்பூசி செலுத்தி 9 மாதங்கள் அல்லது 39 வாரங்கள் ஆகியிருக்க வேண்டும் என்றும் இதுவரை 2.17 கோடி பூஸ்டர் டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன என்றும் இந்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

15-18 வயது வரையிலான பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இந்த ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி முதல், கொரோனா தடுப்பூசி முதல் டோஸ் செலுத்தப்பட்டு வருகிறது

அதே போல, தற்போது 12-14 வயது வரையிலான பள்ளி மாணவர்களுக்கு இந்த ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்கிடையே, கொவிஷீல்ட்தடுப்பூசி முதல் டோஸ் மற்றும் இரண்டாம் டோஸ் செலுத்திக் கொள்வதற்கான கால இடைவெளியை குறைத்து இந்திய மத்திய சுகாதாரத்துறை அறிவிப்பை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் இருந்து இன்னும் ஒமிக்ரோன் முழுமையாக நீங்கவில்லை என எச்சரிக்கை




இந்தியாவிலிருந்து ஒமிக்ரோன் தொற்று இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்று இந்திய மத்திய சுகாதாரத் துறை இணை செயலாளர் லாவ் அகர்வால் டெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது எச்சரித்திருக்கிறார்.

உலகில் 99 நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து கொரோனா தடுப்பூசிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இந்தியா 145 நாள்களில் 2.5 கோடி தடுப்பூசிகளை செலுத்தியது. இதுவரை நாடு முழுவதும் 181 கோடி தவணை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி போட்டுக்கொண்ட அனைவருக்குமே கியு.ஆர். பட்டைகள் அடங்கிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. நாங்கள் தொழில்நுட்பத்துடன் மனித வளத்தையும் சிறப்பாகப் பயன்படுத்தி முழுமையாக பணியாற்றினோம்.

ஒமிக்ரோன் தொற்று இந்தியாவில் முழுமையாக ஒழியவில்லை. உலகின் மற்ற நாடுகளைவிட இந்தியா 23 மடங்கு சிறப்பாகவே செயல்பட்டு ஒமிக்ரோன் தொற்றை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம். இதனால் பலரின் மதிப்புமிக்க வாழ்க்கை காக்கப்பட்டுள்ளது, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




## ஆஸ்திரேலியாவால் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பழங்கால பொருள்களை நேற்று பார்வையிட்டார் மோடி


இந்தியா - ஆஸ்திரேலியா இருதரப்பு உச்சி மாநாடு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தியப் பிரதமர் மோடிக்கும் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசனுக்கும் இடையிலான மெய்நிகர் சந்திப்புக்கு முன்னதாக இருபத்தியொன்பது தொல்பொருள்கள் ஆஸ்திரேலியாவால் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

சிவன், சக்தி, விஷ்ணு சிலைகள், ஜெயின் பாரம்பரியம் தாங்கிய உருவப்படங்கள் மற்றும் அலங்காரப் பொருள்கள் என ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த பழங்காலப் பொருள்களை பிரதமர் மோடி ஆய்வு செய்தார்.

இந்த 29 பழங்காலப் பொருள்களும் கல், பளிங்கு, வெண்கலம், பித்தளை, காகிதம் என பல்வேறு பொருள்களால் செய்யப்பட்டவை ஆகும். இந்தபழங்காலபொருட்கள் ராஜஸ்தான், குஜராத், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவை.

ஆஸ்திரேலியாவுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கடத்தப்பட்ட இந்தக் கலைப்பொருள்கள், உரிய மாநிலங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மணிப்பூர் முதலமைச்சராக பிரேன் சிங் மீண்டும் தெரிவு



உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் சமீபத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற்றது. இந்த 5 மாநிலங்களில் 4 மாநிலங்களை பா.ஜ.க. கைப்பற்றியது.

பஞ்சாப்பில் ஆம் ஆத்மி அபாரமாக வெற்றி பெற்று முதல் முறையாக ஆட்சி அமைத்தது.

பா.ஜ.க. 4 மாநிலங்களில் வெற்றி பெற்றாலும் இன்னும் எந்த மாநிலத்திலும் ஆட்சி அமைக்கவில்லை. உத்தரப் பிரதேச முதல் மந்திரியாக யோகி ஆதித்யநாத் வரும் வெள்ளிக்கிழமை பதவியேற்க இருக்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

உத்தரகாண்ட், கோவா மாநிலங்களில் முதலமைச்சர் யார் என்பது தொடர்பாக இழுபறி நீடித்தது.

இந்த நிலையில் மணிப்பூர் மாநிலத்தில் முதலமைச்சராக பிரேன் சிங் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் பிரேன் சிங் சட்டமன்றக் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

மணிப்பூர் மாநிலத்தின் அடுத்த முதல் மந்திரி யார் என்ற கேள்விகள் கடந்த ஒருவாரமாக அம்மாநில அரசியல்வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்ட நிலையில், தற்போது அதற்கு விடை கிடைத்துள்ளது.

# வாகரையில் இறால் வளர்ப்பு பண்ணை அமைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்





மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் இறால் வளர்ப்பு பண்ணை அமைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அதனை தடுத்து நிறுத்துமாறு கோரி பிரதேச மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் நேற்றுக் காலை ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பு ஒன்று கூடியவர்கள் கையில் வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை பிரதேச செயலகத்தின் வாயில் கதவைப் பூட்டியும் செயலக உத்தியோகஸ்த்தர்கள் உள்ளே செல்லாதவாறும் தடுத்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள். பின்னர் பொலிஸாரின் தலையீடு மற்றும் பிரதேச செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கதவைத்திறந்து விட்டனர். இதனால் அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இவ்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவுள்ளார் எனக்குறிப்பிட்ட அவர்கள் இத்திட்டத்தினை அவர் கைவிடவேண்டுமெனவும் கோரினர். தனியார் கம்பனி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

இதன்போது பிரதேச செயலாளர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கலந்துரையாடலை மேற்கொண்டார். தெரிவிக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் பேச்சு பயனற்று போனதால் பிரதேச செயலக நிர்வாகத்தினர் அவ்விடத்தினை விட்டு விலகி சென்றனர்.

இரண்டாம் கட்டமாக மீண்டும் பேச்சு மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில ஈடுபட்டவர்களில் 10பேர் கொண்ட குழு வரவழைக்கப்பட்டு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடல் நிகழ்வில் இத்திட்டத்திற்கான பல்வேறு குறைபாடுகள் முன்வைக்கப்பட்டு திட்டத்தினை அமுல்படுத்தாதவாறு தடுத்து தருமாறு அக்குழு கோரிக்கை விடுத்தது.

இந்தத் திட்டம் ஆரம்பிப்பது தொடர்பாக 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும், 1,100 ஹெக்டேயர் அளவு நிலப்பரப்பில், 150 ஹெக்டேயர் நிலம் நண்டு வளர்ப்பிற்கு மாங்கேணி பகுதியில் ஒதுக்கபட்டுள்ளது என்றும், எஞ்சிய 950 ஹெக்டேயர் இறால் வளர்ப்பிற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் இத்திட்டத்திற்கு மக்களின் எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதால், சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், தற்போது மேற்கொள்ளும் நில அளவை விடயத்தை இடை நிறுத்தி தருவதாகவும் கலந்துரையாடலின் போது பிரதேச செயலக நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடப்பட்டு போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.

காலை 6.30 மணிக்கு ஆரம்பமான போராட்டமானது மதியம் 12 மணி வரை நீடித்தது. இதனால் பிரதேச செயலக நிர்வாக நடவடிக்கைகளில் சுமார் 4 மணி நேரம் பாதிப்பு ஏற்பட்டது. வாகரை தட்டுமுனை தொடக்கம் கட்டுமுறிவு வரையான சுமார் 950 ஹெக்டேயர் அளவு கொண்ட ஆற்றுக்களப்புப் பிரதேசங்களில் இறால் பண்ணை அமைக்கும் நடவடிக்கைக்கு காணி தெரிவு செய்யப்பட்டு, நிலஅளவையாளர்களைக் கொண்டு காணி அளவீடு செய்யப்பட்டு வருவதாகவும், இவ்விடயம் தொடர்பாக பிரதேச மட்ட சமூக அமைப்புக்கள் மற்றும் மீனவர் சங்க அமைப்புக்களுடன் எது விதமான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் கவலை தெரிவித்தனர்.

இத்திட்ட நடவடிக்கை தொடர்ந்தால் ஆற்றுப் பகுதியை அண்மித்த பிரதேசங்களில் இயற்கை சமநிலையில் குழப்பம் ஏற்படுவதுடன் களப்பு மீன்பிடி, சேனைப் பயிர்ச்செய்கை, வாழ்வாதாரம் போன்றவை பாதிக்கப்படும், காடழிவு, பறவைகள், விலங்குகளுக்கு சரணாலயம் இல்லாமல் போதல் போன்றவையும் இடம்பெறும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மக்களின் மீது வரலாறு காணாத சுமை; பிரதேசசபை உறுப்பினர் பதவி துறப்பு

(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் வை.எம்.முஸம்மில் தனது உறுப்பினர் பதவியிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்புரிமை மற்றும் அமைப்பாளர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்துள்ளார்.



இராஜினாமாக் கடிதங்களின் பிரதிகள் கட்சிச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தேர்தல் ஆணையாளர், அம்பாறை மாவட்ட உதவிதேர்தல் ஆணையாளர், தவிசாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திடீர் இராஜினாமாவுக்கான காரணம் என்ன என வினவியபோது

'சமகால அரசாங்கம் பொதுமக்கள் மீது வரலாற்றில் என்றுமில்லாதவாறு பாரிய சுமையை சுமத்தி கையறு நிலையிலிருப்பதால் மக்களுக்காக எனது சகல பதவிகளையும் இராஜினாமாவை செய்தேன்' என்று அவர் கூறினார்.

சம்மாந்துறை உறுதியான, தரமான தவிசாளரைப் பெற வேண்டுமென்பதற்காக கட்சி அரசியலுக்கு அப்பால் நான் தற்போதைய தவிசாளர் நௌசாட் அவர்களை தவிசாளராக்கினேன். அவருக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கினேன். - என்றார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சமகாலபோக்கு சிறுபான்மையினரைக் கிள்ளுக்கீரையாக பயன்படுத்தி அதிகாரமில்லாத உள்ளூர் அமைப்பாளர்களிடம் மண்டியிட வைத்து காலத்தை இழுத்தடிப்பதாகவே உள்ளது. இதில் இன்னமும் இருந்து மக்களுக்கு சேவைசெய்யலாமென எதிர்பார்க்கமுடியாது. எனவே எனது உறுப்புரிமை, பதவி அனைத்தையும் இராஜினாமாச் செய்கிறேன்.- என்றார்.

## கல்முனை பிராந்திய மருத்துவமனைகளுக்கு வைத்திய உபகரணங்கள் வழங்கி வைப்பு



(பைல் இஸ்மாயில்)

கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளியன்று கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் (திருமதி) இ.ஸ்ரீதர் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.ஆர்.எம்.தௌபீக், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ், இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடியின் கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி இணைப்பு அதிகாரி வைத்தியர் ஏ.சி.டில்சாத், கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர் சுலைமாலெப்பை நாசிறூன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை, நிந்தவூர் மற்றும் கல்முனை மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை, திருக்கோவில் கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை, முகம்மதியாபுரம் மருந்து உற்பத்தி நிலையம், காரைதீவு, மருதமுனை மத்திய மருந்தகம் போன்றவற்றுக்கான வைத்திய உபகரணங்கள் மற்றும் தளபாடப் பொருள்கள் அந்தந்த நிறுவனங்களின் வைத்திய பொறுப்பதிகாரிகளிடம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது கல்முனை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்ற நோயாளிகளை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் (திருமதி) இ.ஸ்ரீதர் பார்வையிட்டார். அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

# பாகிஸ்தான் – ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள், ரி–20 போட்டிகளுக்கான மைதானங்கள் மாற்றம்

ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகள் ராவல் பிண்டியிலிருந்து லாகூரிற்கு மாற்றப்படுகின்றன என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகள் கொண்ட தொடர் ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்,இரண்டு கிரிக்கெட் சபைகளின் பேச்சுகளுக்கு அமைய லாகூரிற்கு மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மைதானங்கள் மாற்றப்பட்டாலும் போட்டிகள் நடைபெறும் திகதிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளுக்கான ஆஸ்திரேலிய அணி எதிர்வரும் 24ஆம் திகதி நேரடியாக லாகூருக்கு வரவுள்ளது. ஒருநாள் தனிமைப்படுத்தலில் இருந்த பின்னர் அந்த பயிற்சிகளை ஆரம்பிக்கும்.

ஆஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் விளையாடவுள்ள இந்த மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஐ.சி.சி. சுப்பர் லீக்கிற்கான புள்ளி களை வழங்கும் தொடராக அமையவுள்ளது. இந்த புள்ளிப்பட்டியலில் பாகிஸ்தான் அணி 9 ஆவது இடத்திலும் ஆஸ்திரேலிய அணி 7ஆவது இடத்திலும் உள்ளன.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஒருநாள் போட்டிகள் எதிர்வரும் 29, 31 மற்றும் ஏப்ரல் 3ஆம் திகதிகளிலும் ஒரே ரி-20 போட்டி ஏப்ரல் 5ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.



## தடையில்லா சான்றிதழ்; பங்களாதேஷ வீரர் ஏமாற்றம்

தென்னாப்பிரிக்கா அணியுடன் சுற்றுப்பயணம் இருப்பதால் ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்க தஸ்கினுக்கு தடையில்லாச் சான்றிதழை வழங்க வங்கதேச கிரிக்கெட் வாரியம் மறுத்துவிட்டது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் வரும் 26ம் திகதி தொடங்க உள்ளது. இந்த ஆண்டின் புதிய அணிகளாக லக்னோ சூப்பர் ஜெய்ண்ட், குஜராத் டைட்டனஸ் அணிகள் களமிறங்குகின்றன.

கடந்த மாதம் நடந்த ஐ.பி.எல். ஏலத்தில் புதிய நிறுவனமான லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மார்க் வுட்டை ரூ.7.5 கோடிக்கு வாங்கியது. லக்னோ அணி வீரர்கள் பயிற்சிகளை மேற்கொண்டுவரும்நிலையில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மார்க் வுட்டுக்கு முழங்கையில் காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து மார்க் வுட் காயம் காரணமாக ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகினார். அவருக்கு மாற்று வீரராக வங்களாதேச அணியின் வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அகமது விளையாட லக்னோ நிர்வாகம் விரும்பியது. இதனை தொடர்ந்து தஸ்கினை அனுகிய போது அவர் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்கான தடையில்லாச் சான்றிதழை வழங்க வங்கதேச கிரிக்கெட் வாரியம் மறுத்துவிட்டது.

## ஆசிய கிண்ண வாய்ப்பை இழந்தது இலங்கை தேசிய ஹொக்கி அணி



ஆடவர்களுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட ஆசிய சம்மேளன ஹொக்கி தொடரின் அரையிறுதிப் போட்டியில் ஓமானிடம் இலங்கை தோல்வியடைந்துள்ளதையடுத்து 2022ஆம் ஆண்டிற்கான ஹொக்கி ஆசியக் கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பினை இழந்துள்ளது.

இந்தோனேஷியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய சம்மேளன ஹொக்கி தொடரின் அரையிறுதிப் போட்டியில் இலங்கை ஓமானை எதிர்கொள்ள மற்றைய அரையிறுதியில் பங்களாதேஷ் கஷகஸ்தானை எதிர்கொண்டிருந்தது.

இந்த அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கே 2022ஆம் ஆண்டிற்கான ஹொக்கி ஆசியக் கிண்ண தொடரில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலையிலேயே இலங்கை ஓமானிடம் தோல்வியை தழுவி ஆசியக் கிண்ண வாய்ப்பினை இழந்திருக்கின்றது.

இலங்கை அணிக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் ஓமான் 2-0 என்கிற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேநேரம் மற்றைய அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணி கஷகஸ்தானை 8-1 என்கிற கோல்கள் கணக்கில் வீழ்த்தி ஆசிய சம்மேளன கிண்ண ஹொக்கி தொடரின் இறுதிப் போட்டிக்கு ஓமானுடன் சேர்ந்து தெரிவாகும் இரண்டாவது அணியாக மாறியது.

பங்களாதேஷ், ஓமான் அணிகள் அடங்கலாக இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான், தென் கொரியா, மலேசியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் பங்கெடுக்கும் 2022ஆம் ஆண்டுக்கான ஹொக்கி ஆசியக் கிண்ணத் தொடர் மே மாதம் 23ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை இந்தோனேஷியாவில் நடைபெறவுள்ளது.

## ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் ஓகஸ்ட், செப்டெம்பரில்

இந்த ஆண்டுக்கான ஆசியக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரை நடத்தும் வாய்ப்பினை இலங்கை பெற்றுள்ளது. ஆசியக் கிரிக்கெட் சபையால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி முதல் செப்டெம்பர் 11ஆம் திகதி வரை ஆசியக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

இந்த தொடரில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட அணிகள் பங்கேற்கின்றன.

## மகளிர் கிரிக்கெட்டில் மந்தனா புதிய சாதனை



வங்காளதேச அணிக்கு எதிரான ஆட்டத்தில் 30 ரன்கள் எடுத்ததன் மூலம் இந்திய அணியின் ஸ்மிருதி மந்தனா புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் தொடக்க வீராங்கனை ஸ்மிருதி மந்தனா சர்வதேச கிரிக்கெட்டில் புதிய சாதனை படைத்துள்ளார். 2022 மகளிர் உலகக் கோப்பையின்22-வதுலீக்ஆட்டத்தில் வங்கதேசத்துக்கு எதிரான போட்டியில் ஸ்மிருதி மந்தனா 17வது ரன்னை கடந்த போது சர்வதேச கிரிக்கெட்டில் 5,000 ரன்களை அடித்த மகளிர் கிரிக்கெட் பட்டியலில் அவர் இணைந்துள்ளார். இந்தப் போட்டியில் ஸ்மிருதி மந்தனா மொத்தம் 30 ரன்கள் எடுத்தார். அவர் 51 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 30 ரன்கள் எடுத்தார்.

ஸ்மிருதி மந்தனா ஒருநாள் போட்டியில் 2,717 ரன்களும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 326 ரன்களும் டி20 போட்டியில் 1,971 ரன்கள் எடுத்துள்ளார். இதன் மூலம் சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் 5,000 ரன்களை கடந்துள்ளார். இதற்கு முன் மிதாலி ராஜ் மற்றும் ஹர்மன் பிரீத் கவுர் ஆகியோர் இந்தியாவுக்காக இந்த சாதனையை படைத்துள்ளனர்.



## ஆஸ்திரேலிய அணிக்கு தொடர் வெற்றி தென்ஆபிரிக்காவையும் வீழ்த்தியது

தென்ஆபிரிக்கா அணிக்கு எதிரான ஆட்டத்தில் அபாரமாக ஆடிய ஆஸ்திரேலிய கப்டன் மேக் லேனிங் சதம் அடித்தார். 97ஆவது போட்டியில் ஆடும் அவருக்கு இது 15வது சதமாகும்.

மகளிர் உலக கோப்பையில் வெல்லிங்டனில் இன்று நடந்த ஆட்டத்தில் 6 முறை சம்பியான ஆஸ்திரேலியா- தென் ஆபிரிக்கா அணிகள் மோதின.

முதலில் விளையாடிய தென்ஆப்பிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 271 ரன் குவித்தது. லவுரா வால்வோ 90 ரன்னும், கப்டன் சுனே லுசஸ் 52 ரன்னும் எடுத்தனர். பின்னர் ஆடிய ஆஸ்திரேலியா 45.2 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 272 ரன் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலிய கப்டன் மேக் லேனிங் அபாரமாக ஆடி சதம் அடித்தார். 97ஆவது போட்டியில் ஆடும் அவருக்கு இது 15ஆவது சதமாகும். மேக் லேனிங் 130 பந்துகளில் 15 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 135 ரன் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். ஆஸ்திரேலிய அணி தோல்வி எதையும் சந்திக்காமல் தொடர்ந்து 6ஆவது வெற்றியை பெற்றது. தென் ஆபிரிக்காவுக்கு முதல் தோல்வி ஏற்பட்டது.

# டிஜிற்றல் தனித்துவ சட்டத்தை நடைமுறைப்படுத்த இந்திய அரசின் நிதி உதவியைப் பெறத் தீர்மானம்!

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிற்றல் தனித்துவ சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிற்றல் தனித்துவ சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசு 30 கோடி இந்திய ரூபாக்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது.

மேற்படி உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக இருதரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக் கையில்கையொப்பமிடுவதற்குமுன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைவுக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

அதற்கமைய, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



## இலங்கைக்கு விஜயம் செய்கின்றார் அமெ. துணைச் செயலர் நுலாண்ட்

இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்டோரியா நுலாண்ட் இலங்கைக்கு இன்று வரவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

அத்துடன் 23 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சில் நடைபெறும் இலங்கை – அமெரிக்க பங்காளித்துவ உரையாடலின் 4 ஆவது அமர்வுக்கு அமைச்சர் பீரிஸ் மற்றும் நுலாண்ட் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

இதேவேளை துணைச் செயலாளர் நூலன்ட் கொழும்பு துறைமுகத்துக்கு விஜயம் செய்து வர்த்தக மற்றும் சிவில் சமூகத்தினரைச் சந்திக்க உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் டொனால்ட் லூ மற்றும் இந்தோ–பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான கொள்கை துணைப் பாதுகாப்புச் செயலாளர் அமண்டா டோரி ஆகியோரும் நுலாண்டுடன் வருகை தரவுள்ளனர்.

## ஒரு லட்சத்து 61 ஆயிரம் ரூபாவாக எகிறியது நாட்டில் தங்கத்தின் விலை!



வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவிற்கு தங்கத்தின் விலை நேற்று (திங்கட்கிழமை) அதிகரித்துள்ளது.

நேற்றைய விலை நிலவரத்தின் படி 24 கரட் தங்கப் பவுணின் விலை 161,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அத்துடன் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 149,000 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் தங்கம் விலை ஒரு அவுன்ஸின் விலை 1,918.84 டொலர் ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம்!

வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லது சட்ட ரீதியான பிரிதலை ஏற்றுக்கொள்ளல் தொடர்பாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய சட்ட வரைஞரால் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தில் திருமணத்தைப்பதிவுசெய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் உள்வாங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளிநாட்டு விவாகரத்து பதிவு செய்தல், திருமண முடிவுறுத்தல் அல்லதுசட்டரீதியானபிரிதலுக்கான ஏற்பாடுகள் தொடர்பாகக் கட்டளைச் சட்டத்தில் உள்வாங்கப்படாமையால், திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கு வதற்கும் நீதி அமைச்சர் அலி சப்றி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இதுவரை நாடு வருகை

இந்த வருடத்தில் இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் சுமார் ஒரு லட்சத்து 8 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்தார்.

மேலும், மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுற்றுலாத்துறையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன எனவும் அவர் கூறினார்.

## வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு வீட்டுத்திட்ட முறை நடைமுறை

காணி மற்றும் வீடுகள் இன்மையால் குறைந்த வசதிகளுடன் வாழ்கின்ற வாடகைக் குடியிருப்பாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் உறுதிப்பத்திர வாடகை வீடு எனும் பெயரில் முன்மொழிவுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக கிராமிய வீடமைப்பு, கட்டுமானங்கள் மற்றும் கட்டடப் பொருள்கள் தொழிற்துறை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மேற்படி கருத்திட்டத்தின் கீழ் 4 மாடிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புக்களை நிர்மாணிப்பதற்கும், முதலாம் கட்டத்தின் கீழ் மாகாண மட்டத்தில் 464 வீடுகளுடன் கூடிய 9 வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு ஆரம்பக் கொடுப்பனவை செலுத்துவதற்கான இயலுமை இன்மையால், மாதாந்தம் 15 ஆயிரம் ரூபா வாடகைப் பணமாக 31 வருடங்களுக்கு அறவிடுவதற்கும், இரண்டாவது அல்லது மூன்றாவது பரம்பரைக்கு வீட்டு உரிமையை ஒப்படைக்கக் கூடிய வகையிலும், எந்தவொரு காரணத்துக்காகவும் வீட்டை விற்பனை செய்வதற்கு இயலாத வகையிலும் பயனாளிகளுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இலங்கையிலிருந்து மீண்டும் இந்தியாவை நோக்கி அகதிகள்!

இலங்கையில் இருந்து ஆறு பேர் அகதிகளாக இந்தியாவில் அடைக்கலம் கோரியுள்ளனர் எனத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் தமிழகத்தின் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடல் பகுதிக்கு அருகே உள்ள மணல் திட்டில் இலங்கையைச் சேர்ந்த 6 பேர் இவ்வாறு வந்து இறங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் ஓர் ஆணும் 2 பெண்களும் 3 குழந்தைகளுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர், அவர்களை இந்திய கடலோரக் காவல் படையினர் கரைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பெப்ரவரி மாத நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளாததமிழ்த்தலைவர்கள்

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் ஒருமுறை கூட கலந்து கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் தற்போது வெளியாகியுள்ளது.



அதன்படி 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த மாதத்தில் ஒருமுறை கூட கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவந்துள்ளது.

அவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் அடங்குகின்றனர். மேலும் அமைச்சர் திலும் அமுனுகம, காமினி லொக்குகே ஆகியோரும் குமார வெல்கம, ரொஷான் ரணசிங்க, ஜயந்த வீரசிங்க, திரானஅலஸ்ஆகியோரும்கலந்துகொள்ளவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட குறித்த பிரதிநிதிகள் நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளாதமை தற்போது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

## கடன் மறுசீரமைப்புக்கு அமெரிக்காவை நாடும் அரசு

கடன் மறுசீரமைப்பிற்காக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஒரு சட்ட நிறுவனத்தை இலங்கை நாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## மற்றுமொரு காஸ் கப்பல் இலங்கை வந்தடைந்தது

3, ஆயிரத்து 700 மெற்றிக் தொன் லிட்ரோ காஸ் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிற்றோ காஸ்களுக்கான ஏற்றுமதிக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், கெரவலப்பிட்டியவில் அவற்றை இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2022இல் வெளியிடப்பெற்றது.